வானவில்

VAANAVIL
ISSUE – 23 NOVEMBER 2012

இதழ் - 23 கார்த்திகை 2012

# போர்க் குற்றச்சாட்டு விசாரணை
## சரியான இலக்கை நோக்கி நகர வேண்டும்!



இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2009 மே மாதம் நடைபெற்ற இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட விடயம், இப்போது எல்லோருமே ஏற்றுக் கொள்ளும் ஒரு உண்மையாகிவிட்டது. இதில் தொடர்ந்து சர்ச்சைக்குரிய விடயமாக இன்னமும் இருப்பது, யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பில் எந்தத் தரப்பு பொதுமக்களின் உயிரிழப்புகளுக்குப் பிரதான காரணகர்த்தாக்கள் என்பதுதான். அத்துடன் போர்க்களத்தில் நேரடி மோதலில் ஈடுபட்ட அரச படைகளையும், புலிப் படைகளையும் தவிர, இந்தப் போரில் மறைமுகமாக அல்லது பின்னணியில் இருந்து பங்கு வகித்து, பொதுமக்களின் இழப்புகளுக்குக் காரணகர்த்தாக்களான பிற சக்திகள் எவையெவை என்பதும் இன்னொரு விடயமாகும்.

இந்த இறுதிப் போரில் மட்டுமின்றி, நாட்டில் 30 வருடங்களாக நடைபெற்று வந்த இனவாத யுத்தத்தில் உள்நாட்டுச் சக்திகள் மட்டுமின்றி, சில பிராந்திய, சர்வதேச வல்லரசுச் சக்திகளும், ஐக்கிய நாடுகள் சபையும் கூட சம்பந்தப்பட்டு வந்துள்ளன என்பதும் இரகசியமான விடயமல்ல.

இறுதிப் போரின் போது, புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட புலிகளின் பிரதான தலைமை அழிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான புலி உறுப்பினர்கள் அரச இராணுவத்திடம் சரணடைந்தனர். இறுதிக் கட்டப் போரின் போது உண்மையில் என்ன நடந்தது என்பதற்கு, அந்தப் போரின் போது புலிகளால் தமது பாதுகாப்பிற்காகப் பலவந்தமாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்து, பின்னர் அரச படைகளால் மீட்கப்பட்ட 3 இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் நேரடிச் சாட்சிகளாவர்.

ஆனால் போரின் போது நடைபெற்ற விடயங்களைக் கண்டறிவதற்கு, இந்த மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரைத் தன்னும் விசாரிப்பதற்கு இன்றுவரை இலங்கை அரசு மீது தொடர்ச்சியாகப் போர் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வரும் சர்வதேச சக்திகள் முயன்றதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசு மீதான இந்தக் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, இறுதிக்கட்டப் போரின் போது நடைபெற்ற உரிமை மீறல்கள் சம்பந்தமாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.செயலாளர்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# பாலஸ்தீன மக்களுக்கு கிடைத்த வெற்றி

**29**.11.2012 இல் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமையற்ற பார்வையாளர் தகுதியை (non-member observer state) பாலஸ்தீனம் பெற்றுள்ளது. 29.11.1947இல், அதாவது சரியாக 65 ஆண்டுகளுக்கு முன்னர், பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்த பாலஸ்தீனத்தை இரு நாடுகளாகப் பிரித்து ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றி, இஸ்ரேலை யூத இனத்திற்கான ஒரு தனி நாடாக்கியது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு முழு உறுப்புரிமை பெற எல்லாத் தகுதிகளும் பாலஸ்தீனத்திற்கு உண்டு. ஆனால் இஸ்ரேலும் அமெரிக்காவும் இதனை கடுமையாக எதிர்த்து வருகின்றன. 2011இல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்புரிமை பெறக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் பாதுகாப்புச் சபையில் தோற்கடிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தின் 4(2)இன்படி ஒரு நாடு முழு உறுப்புரிமை பெறுவதற்கு பொதுச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெறவேண்டும். பின்னர் அதனை பாதுகாப்புச் சபையும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். 2011 ஆண்டில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து, முழு உறுப்புரிமைக் கோரிக்கையைக் கைவிட்டு உறுப்புரிமையற்ற ஒரு நாடாக பாலஸ்தீனத்தை ஏற்றுக் கொள்ளும் (வத்திக்கான் போன்று) முன்மொழிவு பொதுச் சபையின் முன் வைக்கப்பட்டது.

இதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மொத்தம் 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், சுவிற்சர்லாந்து, ரஸ்யா, சீனா, இந்தியா உட்பட 138 நாடுகள் வாக்களித்துள்ளன. அமெரிக்கா, இஸ்ரேல், கனடா, செக்குடியரசு உட்பட 9 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன. அமெரிக்காவின் பிரச்சாரத்துக்கு எடுபட்ட பிரித்தானியா, ஜேர்மனி, நெதர்லாந்து, போலந்து, சிங்கப்பூர் உட்பட 41 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாக்கெடுப்புக்கு முன்னதாக பேசிய பாலஸ்தீனத்தின் அதிபர் மஹ்மூத் அப்பாஸ், “பாலஸ்தீனத்துக்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான தீர்மானம் இது“ என்று கூறினார். ஐக்கிய நாடுகள் சபையில் வாக்களிக்கக் கூடிய உரிமை பாலஸ்தீனத்துக்கு இன்னமும் கிடைக்காவிட்டாலும், ஐக்கிய நாடுகள் சபையின் இதர அமைப்புகளில் பாலஸ்தீனம் இணைந்து செயல்படலாம். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை விவாதங்களில் பங்குகொள்ளவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் (International Criminal Court - ICC) இணைந்துகொள்ளவும் பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறிப்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில், இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பாக நேரடியாக முறையிடக் கூடிய தகுதி பாலஸ்தீனத்துக்குக் கிடைத்திருக்கிறது.

ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளே யூதர்களை பல கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள் என்பதை வரலாற்றில் காண முடிகின்றது. 1945 ஆண்டு முடிவடைந்த இரண்டாம் உலக யுத்தத்தில், ஐரோப்பாவில் மாபெரும் அழித்தொழிப்பிற்கு (60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டார்கள்) இலக்காகியிருந்த ஓர் இனக்குழுவான யூதர்கள், 1947 ஆண்டின் பின்னர், மத்திய ஆசியாவில் பாலஸ்தீன இனத்தை அழித்தொழிக்கும், பாலஸ்தீன நிலங்களை அபகரிக்கும் புதிய இனக்குழுவாக மாறியுள்ளார்கள்.

பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை இஸ்ரேல் என்பது ஓர் ஆக்கிரமிப்பு நாடாகும். பாலஸ்தீனத்தின் காஸா (Gaza) மற்றும் மேற்குக்கரைப் (West Bank) பகுதிகள் 1947 ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டதின் பின்னர், இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இஸ்ரேலிய இராணுவத்திற்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதல்கள் எண்ணிலடங்காது. ஐக்கிய நாடுகள் சபை உறுப்புரிமையற்ற பார்வையாளர் தகுதியை பாலஸ்தீனத்திற்கு வழங்கியதற்கு பதிலடியாக, இஸ்ரேல் தான் மேற்குக் கரையோரத்தில் புதிய யூதக் குடியேற்றங்களைத் நிறுவப் போவதாகவும் அறிவித்துள்ளது. இதனை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகள் கண்டித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமையற்ற பார்வையாளர் தகுதியைப் பயன்படுத்தி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற அமைப்புகளில் பாலஸ்தீனம் உறுப்புரிமை கோரினால், அமெரிக்கா தனது பாலஸ்தீனத்திற்கான நிதி உதவிகளை நிறுத்தும் என்று மிரட்டியுள்ளது. பாலஸ்தீனர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் கிடைத்துள்ள ஆதரவினால் அமெரிக்கா கடும் சினமடைந்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையினால் முழுமையாக ஒரு தனி நாடு என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முந்தைய நிலையாக ‘உறுப்புரிமையற்ற பார்வையாளர்’ என்கிற தகுதியைக் கருதலாம். மேலும் இந்தத் தகுதி, ஐக்கிய நாடுகள் சபையின் 194வது நாடாக பாலஸ்தீனம் உருவெடுக்கும் நாள் வெகுதொலைவில் இல்லையென பாலஸ்தீன மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்து இருக்கிறது. *

---

**வானவில்**


**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

கேரளாவுக்குத் திரும்பி வந்த பிறகு ஒவ்வொரு வருடமும் நான் மண்டல பூஜை, மகர விளக்கு நாட்களில் தொடர்ந்து சபரிமலை பாதுகாப்புப் பணிக்குச் செல்வதுண்டு. அப்போதெல்லாம் இந்துக்களான காவல்துறையினரை மட்டும்தான் சபரிமலைப் பணிக்கு அனுப்புவார்கள். விருச்சிக (கார்த்திகை) மாதம் ஒன்றாம் தேதி முதல், மலைக்குப் போகும் பக்தர்கள் 41 நாட்கள் விரதம் மேற்கொண்டிருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமிருக்கிறது. அப்படி விரதமெடுத்தவர்களுக்கென பிரத்தியேகமாக 'ஸ்வாமி மெஸ்'சும் இருந்தது. நான் பணிக்குச் செல்வதற்காக மாலையணிந்திருந்தேன் என்றாலும் ஃபேமிலி குவாட்டர்சில் தங்கியிருந்ததால், அசைவம் சாப்பிடுவதைத் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன். அதுமட்டுமல்ல, பக்கத்து ஊரான கண்ணூர் மங்நாட்டுப் பரம்பில்தானே பரச்சினிக் கடவு முத்தப்பன் கோயில் இருக்கிறது. அங்கேதான் சபரிமலை அய்யப்பனின் அப்பா இருக்கிறார். பெரியவருக்குக் கள்ளும் மீனும்தான் விருப்பம். ஆகவே, இவற்றைச் சாப்பிடுவதால் அய்யப்பனுக்கு தனிப்பட்ட வகையில் விரோதமிருக்க முடியாதென்பது என் நம்பிக்கை.

நான் சபரிமலைப் பணிக்குச் செல்ல விரும்புவதற்கு பக்தியைவிட முக்கியமான காரணம் அங்குள்ள வசதிகள்தான். பணம் சம்பாதிப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகள் அங்கே இருந்தன. கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் மட்டும் போதும். ஒவ்வொருவரும் தனித்தனியான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதுண்டு. கோயிலின் முன்புறமிருக்கும் ஆழியில் அய்யப்ப பக்தர்கள் தேங்காய் அபிசேகம் செய்ய வேண்டாமா?" காக்கியணிந்தவர்கள் மீதும், சபரிமலையில் இந்த ஸ்வாமிகளுக்கு நல்ல நம்பிக்கை உண்டு. "வேணும் சாமீ, நீங்க உதவி செய்வீர்களா?" என்று கேட்காமலிருக்க மாட்டார்கள். ஏனென்றால் ஒவ்வொரு குழுவினரிடமும் 100 – 150 நெய்த் தேங்காய்கள் இருக்கும். இதை உடைத்து ஒரு பாத்திரத்திலிட்டு அபிசேகச் சீட்டு வாங்கி கோயிலுக்குச் சென்று அபிசேகம் செய்து முடிப்பதென்பது சாதாரண காரியமல்ல. பல மணி நேரங்கள் வரிசையில் காத்து நிற்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த இடத்தில் அவர்கள் உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள். ஒவ்வொரு தேங்காயாக எண்ணி சீட்டு வாங்கி விடுவார்கள். மலையாளிகளில் சிலராவது 50 தேங்காய் இருந்தால் 10 தேங்காய்க்கான அபிசேகச் சீட்டுத்தான் வாங்குவார்கள். எந்தத் தமிழனும் இந்த எண்ணிக்கையைக் குறைப்பதில்லை.



# சபரிமலையில் நடப்பது!

உடைத்த நெய்த் தேங்காய்களை அள்ளிப் போடுவதை, ஆழியில் டியூட்டியிலிருப்பவர் அனுமதிக்க மறுத்தால் தேங்காய்க் குத்தகைக்காரர் தினந்தோறும் அவர்களுக்குப் படியளப்பார்.

எனக்கு வழக்கமாக 18ஆம் படி டியூட்டிதான். நான்கு மணிநேரப்பணி. கடினமாக இருந்தாலும் வேலை முடிந்த பிறகு சுதந்திரமாகிவிட முடியும். எனது இரை அய்யப்ப பக்தர்கள்தான். அவர்கள்தானே சபரிமலைக்கு முழு நம்பிக்கையுடன் வருபவர்கள். அவர்கள் நாற்பது, ஐம்பது பேர்களடங்கிய குழுவாகவே வருவார்கள். இப்படிப்பட்ட குழுக்களையே நான் நோட்டம் போடுவேன். அவர்களிடம் ஸ்வாமி பக்தியிருப்பதால் குரு பக்தியுமிருக்கும். குருஸ்வாமி சொல்வதை மட்டுமே அவர்கள் செய்வார்கள். ஆகவே, என் வேலை சுலபமாகி விடும். அவர்களை நோட்டமிட்டு அவர்கள் எங்காவது தாவளம் வைத்தால் நான் குருஸ்வாமியை நெருங்குவேன். "பெரிய ஸ்வாமி, நான் தேங்காயை எண்ணி, பணம் வாங்கிக் கொள்வேன். கௌண்டருக்குப் போய் ஐந்தோ, பத்தோ ரூபாய்க்கான சீட்டை வாங்குவேன். மீதிப் பணத்தை பாக்கெட்டில் சொருகிக் கொள்வேன். பிறகு நேராக ஸ்வாமியையும் அழைத்துக் கொண்டு கோயிலின் முன் செல்வேன். இதெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாகக் காத்துக் கிடக்கும் போது நடக்கும் காரியங்கள். அங்கே சீட்டை வாங்கிக் கிழிப்பவன் தேவஸ்வம் போர்டு பணியாளனாகவே இருப்பான். அவனிடம் சீட்டைக் கொடுத்து என் ஊர்க்காரன் என்று சொல்லிவிட்டு நானே நெய்ப் பாத்திரத்தை வாங்கி உள்ளே கொடுப்பேன். உடனே அபிசேகம் செய்து கிடைத்துவிடும். திரும்பவும் அந்தக் குழுவினரிடம் வருவேன். குரு ஸ்வாமி 100 – 200 என்று தருவார். எல்லாம் சேர்த்து 500 ரூபாய் தேறும். ஒரு மணிநேர முயற்சிதான். நம்பிக்கையை விற்று காசாக்கும் விதம் எப்படியிருக்கிறது?

அதற்குப் பிறகு காவலர்களின் முகாமில் சீட்டு விளையாட்டு மும்முரமாக நடந்து கொண்டிருக்கும். மூணு சீட்டு முதல் 'பேங்க்' வரை விளையாட்டு பல குழுக்களாக நடக்கும். உடனே பணம் தேவைப்படுபவர்கள் மூணு சீட்டிலோ, பேங்கிலோ விளையாடுவார்கள். எனக்கு அவசரம். ஆகவே, கையிலிருப்பது சீக்கிரமாகத் தீர்ந்து போகும். உடனே அடுத்த குழுவைத் தேடிப் போவேன். எந்தவொரு குற்றவுணர்ச்சியுமே இதில் எனக்குத் தோன்றியதில்லை. ஏனென்றால், மக்களின் நம்பிக்கையை விற்றுத்தானே தேவஸ்வம் போர்டும் அங்கே வேலை பார்ப்பவர்களும் கொழுக்கிறார்கள். "அண்ணான் (அணில்) குஞ்சுக்கும் தன்னாலானது" என்றுதான் இதைக் கருத வேண்டியிருக்கிறது.

மற்றொரு கூட்டம், காவல் நிலையத்தில் இருப்பவர்கள். ஒரு விரத காலத்தின் போது 200 – 300 மணிப்பர்சுகளையாவது நேர்மையான அய்யப்ப ஸ்வாமிமார்கள் கொண்டு வந்து காவல் நிலையத்தில் ஒப்படைப்பார்கள். அதைத் தவற விட்டவர்களில் பெரும்பான்மையானவர்களும் கையிலுள்ள மொத்தப் பணத்யையுமே அதில்தான் வைத்திருப்பார்கள். கிடைத்த பக்தரும் அதை அப்படியே காவல் நிலையத்தில் ஒப்படைத்து விடுவார். காவல் நிலையத்திலிருந்து உடனே ஒலிபெருக்கியில் அறிவிப்பு வெளியாகும். 'ஒரு மணிபர்சு கிடைத்திருக்கிறது. அதைத் தவறவிட்ட பக்தர்கள் அடையாளத்தைக் குறிப்பிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்' என்று. பறிகொடுத்த பக்தர் நிம்மதிப் பெருமூச்சுடன் காவல் நிலையத்திற்கு ஓடுவார். அங்கே போய் விவரத்தைச் சொல்வார். "உன் மணிபர்சு என்ன நிறம்?" "கறுப்பு". அப்போது, அங்கே இருப்பவற்றிலிருந்து பிரவுன் நிறமுள்ள மணிப்பர்சை எடுத்துக் காட்டுவார்கள். "இதுவா?" "இல்லை". "சரி, இதுதான் கிடைத்திருக்கிறது". அந்த அப்பாவி பக்தர் வருத்தத்துடன் இறங்கிப் போவார். இப்படியாகக் கிடைக்கும் பர்சுகளிலுள்ள பணத்தைக் காவல் நிலையத்திலிருப்பவர்கள் பகிர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அப்போதுதானே அப்பாவி பக்தன் தவறவிட்ட அடுத்த பர்சு கிடைக்கும்.

அடுத்தது, வெடி வழிபாடு. சபரிமலைக்கு வரும் பெரும்பாலான அய்யப்ப பக்தர்களும் வெடி வழிபாடு செய்வதுண்டு. இந்தக் குத்தகையை பத்துப் பதினைந்து கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்திருப்பார்கள். 'பெரிய வெடி பத்து', 'சிறிய வெடி இருபது'. ஒலிபெருக்கியில் சொன்னதும் பெரிய பெரிய தார் பீப்பாய்களில் ரூபாய்க்குப் பத்து கிடைக்கும் ஓலைப் பட்டாசுகளைக் கொளுத்திப் போடுவார்கள். டும்..டும்..என்று சத்தம் கேட்கும். ஸ்வாமிமார்கள் சரண கோசமிட்டுவிட்டு திரும்புவார்கள். அங்கே பணியிலிருக்கும் காவலர்களுக்கும் நிச்சயம் படியளக்கப்படும்.

அடுத்த இடம், கக்கூஸ், குளியலறை போன்றவைகள். சிறுநீர் கழிக்க 25 காசுகள் என்று தகவல் பலகையில் எழுதப்பட்டிருக்கும். ஆனால், அதற்கு 2 ரூபாய் செலவாகும். குளிப்பதற்கு ஒரு ரூபாய் என்றிருக்கும். ஆனால் ஐந்து ரூபாய் ஆகும். இவற்றையெல்லாம் கண்காணிக்காமல் பாதுகாப்பிற்கு நிற்கும் காவலருக்கு நிச்சயம் படியளக்கப்படும். எல்லாமே பக்திக்கான விலைகள்தான்.

அடுத்தது, இரவில் பணியாற்றும் காவலர்களது முறை. நாற்பத்தொரு நாட்கள் கடுமையான விரதம் மேற்கொண்டு அய்யப்ப ஸ்வாமிமார்கள் அங்கே வருவது அய்யப்பனை தரிசிப்பதற்காக அல்லவா? இந்தப் பக்தர்களுக்கு சாட்சாத் அய்யப்பனுடன் ஒரு இரவு தூங்குவதற்கான பாக்கியம் சித்தித்தால் எப்படியிருக்கும்? தாங்கள் பிறவிப்பயனை அடைந்து விட்டதாகவே நினைத்துக் கொள்வார்கள். இந்த நம்பிக்கைதான் காவலர்களுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுக்கிறது. நடையை மூடிவிட்ட பிறகு யாரையுமே சோபானத்தில் நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது விதி. அதன்படி கிழக்குப்புற வாசல் மூடப்பட்டு விடும். மேற்குப் பாகம் வழியாகவும் வடக்குப் பாகம் வழியாகவும் அய்யப்பனுடன் படுத்துக் கொள்ள விரும்பும் பக்தர்களை ஏற்றி விடுவார்கள். 250 – 300 பேர்களாவது சோபானத்தில் படுத்துக் கொள்வார்கள். அய்யப்பனின் பக்கத்தில். ஆனால், பூசாரி அய்யப்பனை உள்ளே பூட்டி வைத்து விட்டுப் போவார். அப்படியாக தெய்வம் உள்ளேயும், பக்தர்கள் வெளியேவுமாக இரவைக் கழிப்பார்கள். தலை ஒன்றுக்குக் குறைந்தபட்சம் பத்து ரூபாயிலிருந்து கட்டணம் வசூலிக்கப்படும். ஸ்வாமியே சரணமய்யப்பா.

கே.ஜே.ஜோசப், பட்டாலியன் டி.ஐ.ஜியாக வந்த போது – 82இல் என்பதாக நினைவு. எல்லா மதப்பிரிவுகளைச் சார்ந்த காவலர்களும் சபரிமலைப் பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இதை சாட்சாத் இந்து காவலர் ஸ்வாமிகள் விரும்பவில்லை. என்ன காரணமென்றா கேட்கிறீர்கள்? தங்களது தெய்வத்தை மற்றவர்கள் சுரண்டுவதை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்பதை அவர்கள் விரும்பவில்லைப்போல. அய்யப்பா சேவா சங்கம் மூலம் அரசாங்கம் தலையிட்டு அங்குள்ள கிறிஸ்தவ காவலர்கள் முழுவதையும் திருப்பியழைத்தார்கள். அய்யப்பனின் கூட்டாளி, அந்த விருத்தசேதனம் செய்து கொண்டவர் அங்கே இருப்பதால் முஸ்லிம் ஸ்வாமிமார்களுக்கு சபரிமலையில் தடையில்லை. இருந்தாலும் பதினெட்டாம்படி பணிக்கும், சோபான பணிக்கும் அவர்களை நியமிப்பதில்லை. பாபர் மஸ்ஜிதை கரசேவை செய்யும் போது 'அவர்கள்' இதை மறந்து விட்டதற்கான காரணம் எதுவோ?

சபரிமலையில் மிகவும் மோசமான நிலையேற்படுவது வி.வி.ஐ.பி. என்ற பெயரில் அறியப்படுபவர்கள் வருகை தரும்போதுதான். பல மணி நேரங்கள் வரிசையில், தளர்ந்துபோய் அய்யப்பனைத் தரிசித்துவிட நின்று கொண்டிருக்கும் பக்தர்களை இவர்கள் வந்துவிட்டுப் போன பிறகுதான் தரிசனம் செய்ய அனுமதிப்பார்கள். இதற்கிடையில் நெரிசலில் எத்தனை பேர்கள் சிக்கி அவஸ்தைப் பட்டிருப்பார்களோ, யாரையெல்லாம் மருத்துவ மனைக்குக் கொண்டு போயிருப்பார்களோ யாருக்குத்

தெரியும். இதையெல்லாம் யார் கவனித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

இந்த விசயத்தில் முன்னணியில் நிற்பவர் கே.கருணாகரன்தான். (கேரள காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தவர் – வானவில்) அவர் வரும்போது இரண்டு மணி நேரத்திற்கு முன்பே சோபானத்தில் நிற்கும் எல்லா அய்யப்பன்மார்களையும் வெளியே அனுப்பிவிட்டு காவலர்களைப் பாதுகாப்புக்காகப் போட்டு விடுவார்கள். பிறகு, சோபானத்தையும், பதினெட்டுப் படிகளையும் கழுவிச் சுத்தம் செய்வார்கள். முகலாய மன்னர்கள் வரும்போது தர்பார் மண்டபத்திலிருக்கும் சகலரும் எழுந்து முகமன் கூறி வரவேற்பது போல் காவலர்களும் தேவஸ்வம் போர்டு அதிகாரிகளும் இருபுறமும் நின்று அய்யப்பனைவிட பெருந்தெய்வமான அவரை வரவேற்பார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் பக்தர்கள் சகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், அந்த அய்யப்பன் இதை எப்படி சகித்துக் கொள்கிறாரோ தெரியவில்லை. ஒருவேளை, அவரும் பக்தர்களின் மன நிலையுடன் இருக்கிறாரோ என்னமோ.

சபரிமலை சேவையில் எப்போதுமே குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது, அய்யப்பா சேவா சங்கத்தின் செயல்பாடுகள்தான். அவர்களது சேவை மனோபாவத்துடனான பணிகள்தான் அய்யப்ப பக்தர்களுக்கு ஓரளவுக்காவது மன ஆறுதலாக இருக்கும்.

நான் சொன்னவை, அங்கே பணியாற்றச் செல்லும் சில காவலர்களின் விசயங்கள் மட்டும்தான். இருந்தாலும், எந்த ஒரு புனித யாத்தீரிகரின் மனதையும் புண்படச் செய்யாமலிருப்பதில் நான் கவனம் செலுத்தியிருந்தேன். மந்திரம் தெரிந்தவன் தந்திரியும், தந்திரம் தெரிந்தவன் மந்திரியுமல்லவா?

இதில் கொள்ளையர்களிடம் கொள்ளையடிக்கும் காவலருமிருந்தார்கள். சபரிமலையில் மிக அதிகமாக யாத்தீரிகர்களைக் கொள்ளை போடுபவர்கள் வியாபாரிகள்தான். திறமையான சில காவலர்கள் இவர்களிடம் கொள்ளையடிப்பார்கள். இவர்கள் சபரிமலைப் பணிக்கு வழமையாக வந்து கொண்டிருப்பவர்கள். அங்கே பணிக்கு வரும்போதே இவர்கள் எங்கிருந்தாவது ஓரிரு இலட்சம் ரூபாய் கொண்டு வருவார்கள். பத்தாயிரம், இருபதாயிரம் என்று வியாபாரிகளுக்கு கடன் கொடுப்பார்கள். ஆயிரத்திற்கு நூறு ரூபாய் வீதம் தினவட்டி. பணி நேரம் முடிந்ததும் வசூலுக்கு இறங்குவார்கள். வேலை முடிந்து திரும்பும்போது கொண்டு வந்த தொகையை விடவும் இரண்டோ, மூன்றோ மடங்குகள் அதிகமாகக் கொண்டு போவார்கள். எப்படியிருக்கிறது சேவை? சரணமய்யப்பா!

கடினமான விரதங்களைக் கடைப்பிடித்து எல்லா சிரமங்களையும் சகித்துக் கொண்டு ஆன்ம திருப்திக்காக மலையேறும் அய்யப்ப பக்தர்களை அவர்களது சேவகர்கள் என்ற போர்வையுடனிருக்கும் பிரிவினர் எப்படி வரவேற்கிறார்கள் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

தேவஸ்வம் போர்டு என்பது தெய்வங்களின் போர்டு அல்லவா? இதிலிருக்கும் எல்லா உத்தியோகஸ்தர்களும் இந்துக்கள் அல்லவா? சபரி மலைக்கு சேவை செய்வதற்காக வரும் தேவஸ்வம் போர்டின் பெரும் தலைகளைக் கவனித்துப் பாருங்கள். பளபளப்பாக முகச்சவரம் செய்து, பவுடர் பூசி, அழகு ததும்ப, கழுத்தில் கனத்துத் தொங்கும் தங்க ஆபரணத்துடன் அவர்கள் எழுந்தருளுவதைக் கண்டால், அந்த அய்யப்பனுக்கே பொறாமை வரும். நானும் ஒரு தேவஸ்வம் போர்டு அதிகாரியாக இல்லையே என்று பரிதவித்துப் போய்விடக்கூடும். அறுவடையாவது பயிர் விளைந்த பிறகுதானே? ஒருவேளை, விரதமிருக்க இவர்களுக்கு நேரம் கிடைத்திருக்காததாக இருக்கலாம். அய்யப்பன் பொறுத்துக் கொள்வாராக.

சபரிமலை புனித யாத்திரைகளின் போது உங்களுக்கு பம்பையிலிருந்தும் சந்நிதானப் பகுதிகளிலிருந்தும் எந்த மாதிரியான பொருட்கள் வேண்டும்? கொஞ்சம் கிறங்கடிக்க வேண்டுமா? தம் மேரா, தம் வேண்டுமா, எல்லாமே கிடைக்கும். பொறுப்பிலிருப்பவர்களின் எதிரிலேயே! ஒன்று, அவர்கள் கண்ணை மூடிக் கொள்வார்கள். அல்லது, ஒன்றுமறியாதவர்கள் போல் நடிப்பார்கள்.

நான் யோசித்துப் பார்ப்பதுண்டு. சிருஸ்டிகர்த்தாவாகிய பிரம்மனும், பரிபாலித்துக் காக்கும் விஸ்ணுவும், சம்பாகரனும் உக்கிரமூர்த்தியுமான சிவனும் மற்றும் உப தெய்வங்களும் எப்படித்தான் இந்தத் தேவஸ்வம் போர்டைச் சகித்துக் கொள்கிறார்களோ? எதிர்வினையாற்றும் திறனை இழந்துவிட்ட மக்களிடையே இருப்பதால் கடவுளர்களும் இப்படியாகி விட்டிருக்கலாம்.

முன்பெல்லாம் சபரிமலைப் பணி முடிந்து திரும்பி வரும்போது நெய், அரவணை, அப்பம் போன்ற நைவேத்தியப் பொருட்களும், ஆங்காங்கே பக்தர்கள் தவறவிட்ட போர்வைகளும், அவர்கள் தந்த கொஞ்சம் பணமும் காவலர்களிடம் இருக்கும். இன்று, காவலர்களின் ஒவ்வொரு அசைவுகளையும்கூட கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. ஆனால் தேவஸ்வ பெருந்தலைகள், வாரந்தோறும் வீடுகாண மலையிறங்கும்போது அவர்களை சோதனையிட யார் இருக்கிறார்கள்?

(இந்தக் கட்டுரை கேரளாவின் முன்னாள் பொலிஸ் காவலரான ராமச்சந்திரன் நாயர் என்பவர் எழுதி, மதுரையில் இயங்கும் மக்கள் கண்காணிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'நான் வாழ்ந்தேன் என்பதற்கான சாட்சி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. நாயரின் மலையாள மூலத்தை குளச்சல் மு.யூசுப் தமிழில் தந்துள்ளார்.

1970களில் கேரளாவில் பொலிசார் நடாத்திய 'நக்கல்பாரி வேட்டை'யின் போது கைது செய்யப்பட்ட, மக்கள் அபிமானம் பெற்ற வர்க்கீஸ் என்ற நக்சலைட் தலைவனை,

ராமந்சந்திர நாயரைப் பலவந்தப்படுத்தி அவரது உயரதிகாரிகள் அவனைச் சுட்டுக் கொல்ல வைத்தனர். தான் விரும்பாமல் செய்த இந்தக் கொலையை எண்ணி எண்ணி மனம் புழுங்கிய நாயர், பின் அதைத் தானே வெளியுலகிற்கு அம்பலமாக்கினார்.

அதைத் தொடர்ந்து, அந்தக் கொலையை நிர்ப்பந்தம் காரணமாகச் செய்த நாயர் மீதும், அவரை அக்கொலையைச் செய்ய நிர்ப்பந்தித்த பொலிஸ் உயரதிகாரிகள் மீதும், இந்திய மத்திய புலனாய்வுப் பணியகம் (சி.பி.ஐ) வழக்குத் தாக்கல் செய்தது. விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னரே, நாயர் சுகவீனம் காரணமாக மரணமாகிவிட்டார்.

ராமந்சந்திர நாயரின் மனச்சாட்சியை வெளிக்கொணரும் இந்த நூல், இந்தியப் பொலிசார் எப்படி அரசியல் கைதிகளை ஈவிரக்கமின்றிக் கொலை செய்கிறார்கள் என்பதையும், பொலிஸ் துறையில் நிலவும் ஊழல், மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம், துர்நடத்தை என்பனவற்றையும் அம்பலத்துத் கொண்டு வருகிறது.

அதேவேளையில், அய்யப்ப பக்தர்களின் அபரிமிதமான பக்தி நம்பிக்கையை, அய்யப்பன் கோவில் நிர்வாகிகளும், பொலிசாரும் எப்படிப் பயன்படுத்தி தம்மை வளப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் நாயர் தனது சொந்த அனுபவத்தில் விளக்கியுள்ளார். அப்பாவிகளான அய்யப்ப பக்தர்கள் சபரிமலையில் நடைபெறும் சம்பவங்களை விளங்கிக் கொள்வதில் இக்கட்டுரை ஓரளவாவது பங்கு வகிக்கும் என நம்புகின்றோம்.) *

## தென்னிலங்கையில் சில பிரிவுகளில் புதிதாக நிர்வாக மொழிகளாக சிங்களமும் தமிழும்!


நாட்டில் சிங்களம் – தமிழ் ஆகிய இரு மொழிகளையும் நிர்வாக மொழிகளாக்கும் திட்டத்தின் ஒரு அம்சமாக, தென் இலங்கையில் உள்ள 9 மாவட்டங்களில் உள்ள 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், வவுனியா மாவட்டத்திலும் இரு மொழிகளையும் நிர்வாக மொழிகளாக நடைமுறைப்படுத்தும்படி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பிரிவுகளானவை தெகிவளை – மவுண்லவேனியா, கங்கா இகல கோறளை, கண்டி கிறாவெற்ஸ், கங்காவத்தை கோறளை, மாத்தளை, இலங்காபுர, வெலிகண்ட பொலநறுவ, இரத்தினபுரி, பலாங்கொட, மாவனல்லை, கெக்கிராவ, வவுனியா தெற்கு, டெகியட்ட காண்டியா என்பவையாகும்.

உத்தியோக மொழிகள் ஆணையாளர் இதுபற்றிக் கருத்தத் தெரிவிக்கையில், மூன்று மொழிகளையும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) நாடு முழுவதும் அமுல்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இந்த முயற்சிக்கு தேசிய மொழிகள் அமுலாக்கல மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.

**தகவல்: பாலன்** *



# நிலவினை அணுகுண்டு வைத்து தகர்த்தல்

1950களில் நிலவை அணு குண்டு வைத்து தகர்க்க அமெரிக்கா திட்டமிட்டிருந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

1950களில் நிலவை அணு குண்டு வைத்து தகர்க்க 'புராஜெக்ட் ஏ119' (Project A119) என்ற திட்டத்தை அமெரிக்கா தீட்டியது. ஆனால் அத்திட்டத்தை அது செயல்படுத்தவில்லை.

இது குறித்து தி டெய்லி மெயில் (பார்க்க: http://www.dailymail.co.uk/news/ article-2238242/Cold-War-era-U-S-plan-bomb- moon-nuclear-bomb-revealed.html) வெளியிட்டுள்ள செய்தியில், "சோவியத் யூனியன் விண்வெளிக்கு ஸ்புட்னிக் விண்கலத்தை அனுப்பிய பிறகு பூமியில் இருந்து நிலவு வெடிப்பதைப் பார்த்தால் அது சோவியத் யூனியனுக்கு ஒரு பேரதிச்சியாகவும், அமெரிக்காவின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும் இருக்கும்.

பெயர் வெளியிடப்படாத இடத்தில் இருந்து சிறிய அணு குண்டை நிலவுக்கு அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. ஹைட்ரஜன் குண்டை விண்கலத்தில் அனுப்பினால் அது மிகவும் கனமாக இருக்கும் என்பதால் அணு குண்டை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. 238,000 மைல் கடந்து நிலவின் ஒரு பகுதியில் இந்த அணுகுண்டை வெடிக்க வைக்கத் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் இந்த திட்டம் தோல்வி அடைந்தால் பூமியில் உள்ள மக்களுக்கு ஏற்படும் விபரீதங்களை கருத்தில் கொண்டு, இராணுவ அதிகாரிகள் இம்முயற்சியைக் கைவிட்டனர்," என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன் ஸ்புட்னிக்கை அனுப்பியதால் ஆத்திரமடைந்தே இந்தத் திட்டத்தைத் தீட்டியது அமெரிக்கா. மேலும் சோவியத் யூனியனை விட தானே வலிமையானவன் என்பதை நிரூபிக்கவும் இந்த திட்டத்தை தீட்டியது அமெரிக்கா. *

பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் 30ஆவது ஆண்டு நினைவாக....

# நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்

பன்னெடுங்காலமாகச் சமயங்களின் வழிவந்த இலக்கிய நெறி, இருபதாம் நூற்றாண்டிலே சமுதாய வழி நிற்பது நாம் முதலில் எடுத்துக் கூறவேண்டிய செய்தியாகும். இம் மாற்றம் ஏற்பட்டதற்குரிய காரணங்களைச் சுருக்கமாகவேனும் ஆராய்தல் தகும்.

அந்நியரான ஆங்கிலேயரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதைத் தொடர்ந்து, நமது சமுதாயத்தில் சகல துறைகளிலும் பாரதூரமான மாற்றங்கள் ஏற்படலாயின. ஆங்கிலேயர் இந்தியாவில் நிலவும் சமயங்களுக்குத் தடையாக வெளிப்படையான நடவடிக்கைகளை எடுத்தாரல்லர். ஆயினும், அவர்களது ஆட்சிமுறை ஏனைய துறைகளைப்போலவே சமயத்துறையிலும் சீர்குலைவு, நிலை தடுமாற்றம் ஆகியன உண்டாக வழி வகுத்தது. அதுகாலவரை சமயங்களின் வழி வாழ்க்கையும் கலை இலக்கியங்களும் இயங்கி வந்தனவாகையால், பாரதூரமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியதும், சமயத்துறையிலேயே நெருக்கடிகளும் முரண்பாடுகளும் முனைப்பாகத் தோன்றின, வெடித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு கீழைத்தேயச் சமூக இயக்கங்கள் யாவுமே சமயத்துறை பற்றி எழுந்தன. ஆனால், ''ஆன்மீக, பக்தி ரூபத்தில் அவை வெளிப்பட்ட போதிலும், அவற்றுக்கு மூலமாய், அடிப்படையாய், தூண்டுகோலாய்'' மக்களின் வாழ்க்கை பற்றிய அனுதாபக் குரல்களும் எதிர்ப்புக் குரல்களுமே அமைந்திருந்தன என்பதை நாம் மறந்துவிட இயலாது.

நவீன காலம் என்பது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தையும் பகுதியொத்திருக்கின்றது. இது முக்கியமான செய்தியாகும். முந்திய நூற்றாண்டுகளில் அரச வம்சங்கள் மாறும்பொழுது, இராசதானியிலும் அரசவையிலும் சில பல மாற்றங்கள் நிகழுமாயினும், கீழ் மட்டத்தில், வெகுஜனங்களின் வாழ்க்கையில், குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்னும் மக்கள் கூற்று இவ்வுணர்வைப் பிரதிபலிப்பதே. உதாரணமாக, பல்லவர் ஆட்சிக்காலத்திலும் சரி, சோழர் ஆட்சிக்காலத்திலும் சரி, அல்லது பாண்டியர் ஆட்சிக்காலத்திலும் சரி, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில், அதாவது பொருளாதாரம், சமூக அமைப்பு, நீதி பரிபாலனம், சமய நிறுவனங்கள், நடை உடை பாவனை இவற்றில் விதந்து கூறத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதற்கில்லை. கடலின் மேற்பரப்பில், புயலும் அலையும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், கடலின் ஆழ் மட்டத்தில் அமைதியும் சலனமின்மையும் காணப்படுவதுபோல, அரச வம்சங்கள் ஒன்றையொன்று எதிர்த்து அடித்து வீழ்த்திச் சலனங்கள் உண்டாக்கியபோதும், பல நூற்றுக்கணக்கான கிராமங்களாகவும் சிற்றூர்களாகவும் சிதறுண்டு கிடந்த தமிழக மக்களுடைய வாழ்க்கையில் பெருமாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இவ்விடத்திலே இந்தியாவைப் பற்றிப் பொதுவாக கார்ல் மார்க்ஸ் கூறியுள்ள குறிப்பு ஒன்று நினைவுகூரத்தக்கது.



**பேராசிரியர் க.கைலாசபதி**

**''இந்துஸ்தானத்திலே உள்நாட்டுப் போர்களும் படையெடுப்புகளும் புரட்சிகளும் வென்றடக்கும் ஆக்கிரமிப்புகளும் பஞ்சங்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பதும், அவை சிக்கலானவை என்பதோடு விரைவாக நிகழ்ந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்தின என்பதும் உண்மையே. ஆனால் அவையெல்லாம் சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன...இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை. பண்டு ஒழிந்த காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மாறவேயில்லை....அரசுகள் சிதைந்து சின்னாபின்னமானதைப் பற்றி இந்தியக் கிராமவாசிகள் கவலைப்பட்டதேயில்லை. கிராமம் முழுசாக இருக்கும்போது, அது எந்த அரசுக்கு மாறுகிறது அல்லது எந்த மன்னனது பொறுப்பாயிருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. கிராமத்தின் பொருளாதார அமைப்பு மாறவேயில்லை. ஒரே அச்சில் வார்த்தன போன்றும், மாறாதவையாயும் இருந்த இச் சிறு சமூகங்கள் பெரும் அளவுக்கு அழிந்துவிட்டன. அவை மறைந்து கொண்டிருக்கின்றன... ஆங்கிலேயரது நீராவிச் சக்தியும் வர்த்தக சுதந்திரமும் ஆற்றிய வினையே இவ்வழிவுக்குக்**

**காரணமாகும். அந்தக் குடும்ப சமூகங்கள் வீட்டுத் தொழில் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன் அதாவது கையால் நூற்றல், கைநெசவு, கரத்தால் ஏர் பிடித்து உழுது பயிரிடல் ஆகியவற்றின் அலாதியான இணைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அந்த இணைப்பே சுயபலத்தில் நிமிர்ந்து நிற்கும் திறனை அவற்றுக்கு அளித்தது. ஆங்கிலேயர் தலையீட்டால்... ஓரளவுக்கே நாகரிகம் எய்திய அச்சிறு சமூகங்களின் பொருளாதார அடிப்படை தகர்ந்தது. அச்சமூகங்கள் அழிந்தன. இது ஆசியாவில் நிகழ்ந்த மிகப்பெரிய சமூகப் புரட்சியாகும். உண்மையை உரைப்பதெனில், ஆசியாவில் நிகழ்ந்த ஒரே சமூகப் புரட்சி இது''**

**(இந்தியாவின் முதல் விடுதலைப் போர் 1857 1859, பக்கம் 21 – 27)**

ஆங்கிலேயர் ஆட்சியானது, ஆரம்பத்தில் சமயம், சமூக அமைப்பு முதலிய விசயங்களில் நேரடியாக அதிகம் தலையிடாவிடினும், காலப்போக்கில் அதன் அந்நியத்தன்மை காரணமாகவும், பொருளாதார அடித்தளத்தில் மாற்றமேற்பட்டதாலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த ஓர் ஆட்சி முறையைக் கொண்டிருந்ததன் காரணமாகவும், மக்களுடைய வாழ்க்கையின் அத்தனை அம்சங்களையும் பாதிப்பதாயிற்று. சுருங்கச் சொன்னால், முந்திய நூற்றாண்டுகளில் நிகழ்ந்தது போன்று, ஆங்கில அரசு ஆட்சியைக் கைப்பற்றியதோடு மட்டும் அமையவில்லை. தனது சாயலில் முழுச் சமுதாயத்தையே மாற்றியமைக்கவும் உருவாக்கவும் முனைந்தது, முயன்றது. இன்னொரு விதமாகக் கூறுவதானால், ஆங்கிலேயராட்சி முதலாளித்துவ சகாப்தத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. நிலப்பிரபுத்துவத்திலிருந்து விடுபட்டு, தனித்துவமான முன்னேற்றப் பாதையில் வளர்வதற்குத் துடித்துக் கொண்டிருந்த முதலாளித்துவத்திற்கு, ''கிழக்கு இந்தியாவிலும், சீனாவிலும் கிடைத்த சந்தைகள், அமெரிக்காவில் குடியேற்றம், காலனிகளுடன் நடந்த வியாபாரம்'', போக்குவரத்திலும் விற்பனைச் சரக்குகளிலும் ஏற்பட்ட பெருக்கம் ஆகியன உத்வேகம் அளித்தன. அவற்றின் பயனாகத் துரித வளர்ச்சி அடைந்த முதலாளித்துவம், தனது செல்வாக்கிற்குள் அகப்பட்ட இடங்களிலெல்லாம் தனது தேவைக்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்க முற்பட்டது. மார்க்ஸ் இதனைக் கவித்துவ நடையில் விபரித்தார்.

**''பூர்சுவா உற்பத்தி முறையை ஏற்றுத் தழுவாவிட்டால், அழிவே ஏற்படும் என்ற நிர்ப்பந்தத்தின் மூலம், சகல நாடுகளும் அம்முறையைக் கடைப்பிடிக்கும்படி அது செய்கிறது. தான் நாகரிகம் என்று குறிப்பிடுவதைச் சகல நாடுகளும் ஏற்றுத் தழுவ வேண்டுமென்று பூர்சுவா வர்க்கம் கட்டாயப்படுத்துகிறது. அதாவது, அவையும் பூர்சுவாக்களாக வேண்டுமென்று அது நிர்ப்பந்திக்கிறது. ஒரே வாக்கியத்தில் சொல்லப்போனால், தன் பிரதிபிம்பத்தைப் போன்ற ஓர் உலகத்தை இது சிருஸ்டிக்கின்றது''**
**(மார்க்ஸ் – ஏங்கெல்ஸ் – கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை)**

இந்நிலையிலேயே நாளடைவில் மேல்மட்டத்தினர் மட்டுமின்றி, சாதாரண மக்களும் வெவ்வேறு வழிகளிலும் வகைகளிலும் புதிய மாற்றங்களை உணரத் தலைப்பட்டனர் அவற்றின் பாதிப்புக்கு ஆட்பட்டனர். சமுதாயப் பார்வை மிகப்பரந்த அளவில் உருவாகும் நிலை இயப்பாகவே எழுந்தது.

அந்நியராட்சியின் பாதிப்புக்களை நோக்கி எழுந்த இப்பார்வை மூன்று வகையாகச் செயற்பட்டது. இம்மூன்று நோக்குகள் இன்றுவரையில் நமது சமுதாயத்திலும் இலக்கியத்திலும் உந்து சக்திகளாக இருந்து வருகின்றன. முதலாவது: மேனாட்டு நாகரிக முறைகளையும் இலக்கிய இயக்கங்களையும் அப்படியே பின்பற்றும் போக்காகும். இரண்டாவது: மேனாட்டு நாகரிக முறைகள், பண்பாட்டு கூறுகள் என்பவற்றை முழுமையாக நிராகரித்து, அயல்வரவற்ற – திணைப்பிறந்த – அடிப்படைகளை விடாப்பிடியுடன் கைக்கொள்ளும் போக்காகும். மூன்றாவது: அந்நியராட்சியின் விளைவாக வந்து சேர்ந்த சிலபல நாகரிகக் கூறுகளையும் பண்பாட்டு அம்சங்களையும் பிறப்புரிமையான – திணைப்பிறந்த பண்பாட்டுக் கூறுகளுடன் இணைத்துச் சமரசமும் அமைதியும் காணும் போக்காகும். பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என இம்மூன்று போக்குகளையும் சுருக்கமாக விவரிக்கலாம். இவையே நவீன தமிழ் இலக்கியத்தைப் பாதித்து வழிநடாத்தும் முக்கிய போக்குகள் என நான் கருதுகிறேன்.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் தொடங்கி இன்றுவரை, இம்மூன்று அடிப்படைப் போக்குகளுமே எத்தனையோ விகற்பங்களுடனும் வண்ண வேறுபாடுகளுடனும் இலக்கியத்தில் ஒரு வரையறை செய்யும் காரணிகளாய் இருந்து வருகின்றன. நல்லைநகர் ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள் முதலிய சென்ற நூற்றாண்டுப் புலவர் பெருமக்களிலிருந்து, இன்றைய 'புதுக்கவிதை' எழுத்தாளாகள் வரை, எந்த ஒரு தனிநபரையோ அல்லது இலக்கியக் குழுவினரையோ எடுத்து நோக்கினும், அவர்கள் இம்மூன்று போக்குகளில் ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ சார்ந்தவர்களாகவே இருக்கக் காணலாம்.

தமிழகத்தை மட்டுமின்றி அனைத்திந்தியாவையே எடுத்து நோக்கிலும், இம்மூன்று போக்குகளே அடிப்படையானவையாகத் தோன்றும். உதாரணமாக, நவீன மலையாள இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தை எடுத்து நோக்கினால், குமரன் ஆசான் (1873 – 1924), உள்ளூர் பரமேஸ்வர ஐயர் (1877 – 1949), வள்ளத்தோல் நாராயண மேனன் (1878 – 1958) ஆகிய மூவருமே நவீன மலையாளக் கவிதைக்கு ''வேகமும் விறுவிறுப்பும் ஊட்டியவர்கள்''. இம்மூவரில், உள்ளூர் பரமேஸ்வர ஐயர் பழமையைப் போற்றிப் பேணியவராயும், தாழ்த்தப்பட்ட ஈழவ சமூகத்தைச் சேர்ந்த குமரன் ஆசான் அநீதியையும் கொடுமையையும் (சாத்வீகமாக) எதிர்த்துச் சீர்திருத்தம் கோரியவராயும், வள்ளத்தோல் தேசிய இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டு மேலைத்தேய கலை இலக்கியங்களையும், இந்தியக் கலை மரபுகளையும் இணைக்க முயன்றவராயும் காணப்படுகின்றனர்.

வள்ளத்தோலை கேரள மக்கள் மகாகவி என்று போற்றிப் பாராட்டுவர். இம்மூவருள்ளும் குமரன் ஆசான் தமிழ்க் கவி சுப்பிரமணிய பாரதியாருடன் ஒப்பு நோக்கத் தக்கவர். இருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இன்னும் சொல்லப் போனால், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் முகிழ்ந்த முக்கியமான மூன்று சமய இயக்கங்களை ஆராய்ந்தாலும் இவ்வுண்மை உறுதிப்படும். கிறிஸ்துவ தனியொருமைக் கோட்பாடு, ஐரோப்பிய தாராளக் கொள்கை, ஆங்கிலக் கல்வி முதலிய அம்சங்களினால் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பெருமளவுக்குப் பின்பற்றிய பிரம்ம சமாஜத்தினரை முதலாவது பிரிவினருக்குச் சிறந்த உதாரணமாகக் காட்டலாம். பிரம்ம சமாஜம் பிற்காலத்தில் பிளவுண்டு சென்று தேய்ந்து இறந்தது உண்மையே. எனினும் அதன் முனைப்பான பின்பற்றல் பண்பு இன்றுவரை எத்தனையோ வடிவங்களில் எமது கலை இலக்கிய உலகில் நிலவி வருகிறது.

ஒரு விதத்தில் பிரம்ம சமாஜத்துக்கு எதிர் விளைவாக, பரமதக் கோட்பாடுகள், நாகரிகக் கூறுகள், பண்பாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றை முற்றாக மறுத்தும், அந்நியராட்சியை உள்ளூர வெறுத்தும், தமது பாரம்பரியத்திலுள்ள சிந்தனைகளையும் நம்பிக்கைகளையுமே பிரதானப்படுத்திப் பிரசாரஞ் செய்த ஆரிய சமாஜத்தினரை இரண்டாவது பிரிவினருக்குச் சிறந்த காட்டாகக் கொள்ளலாம். வடக்கே தோன்றிய தயானந்த சரஸ்வதியிலிருந்து, இலங்கை நல்லூர் ஆறுமுகநாவலர் வரை, மீட்டுயிர்ப்புக் குரல் (Revivalist) எழுப்பிய அனைவரும் இப்பிரிவில் அடங்குவர். சபாபதி நாவலரிலிருந்து இன்றைய நவ தொல்காப்பியர் வரை, இத்தகைய மீட்டெழுச்சிக் குரலையே இலக்கியத்தில் ஒலிப்பர்.

இவ்விரு இருமுனைப் போக்குகளுக்குச் சிறிது வேறுபட்ட முறையில், எதிலும் காணப்படும் விழுமிய அம்சங்களைத் திரட்டி, ஒன்றிணைப்பினை உன்னதமான வாழ்க்கைத் தத்துவமாகவும் சமய நெறியாகவும் உருவாக்கிய இராமகிருஸ்ண மடாலயத்தினரை மூன்றாவது பரிவினருக்குத் தகுந்த எடுத்துக் காட்டாய் கருதலாம். இம்மூன்று போக்குகளும், முறையே, ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி. ராமகிருஸ்ண பரமஹம்ஸர் ஆகிய மூவராலும் சிறப்பாகச் சமயத்துறையில் தோற்றுவிக்கப்பட்டனவாயினும், பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என்னும் பண்புகள் சகல துறைகளுக்கும் பொருந்துவனவாய் உள்ளன.

இம்மூன்று போக்குகளும் வேறுபடுத்திக் கூறத்தக்கனவாய் இருப்பினும், நடைமுறையில் பல இலக்கியகர்த்தாக்களின் படைப்புக்களில் இப்பண்புகள் விரவிக் காணப்படுவதும் உண்டு. அதுமட்டுமன்று, இம்மூன்று பண்புகளில் ஒன்றை மட்டும் சார்ந்து பற்றிக் கொள்ளும் எழுத்தாளர்கள் நமது யுகத்தின் ஆற்றல் மிக்க எழுத்தாளர்களாய் அமைந்ததுமில்லை. மீட்டுயிர்ப்புக் கொள்கையை நாவலர் பின்பற்றினார். தமிழோடு சைவமும் சேர்ந்தே செழித்து வளருதல் வேண்டும் என நம்பினார். பிரசித்தி பெற்ற பரசமயக் கோளரியாயும் விளங்கினார். அந்த வகையில் தயானந்த சரஸ்வதியை நிகர்த்வர் நாவலர். ஆயினும் தனது சொந்த மதத்திலும், சமயச் சடங்குகளிலும் காணப்பட்ட பல பண்புக் கேடுகளையும், சீர்கேடுகளையும் நீக்கியே புத்துயிரூட்டும் பணியை நிறைவேற்ற முடியும் என்பதை உணர்ந்தார். 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்ற அவரது கட்டுரையில் இவ்வுணர்வைக் கண்டு தெளியலாம்.

இதனைக் கவனிக்கும்போது, நாவலர் மீட்டுயிர்ப்புவாதியாயும், சீர்திருத்தவாதியாயும் இயங்கியதைத் தெளிந்து கொள்ளலாம். திரு.வி.கலியாண சுந்தரரை எடுத்துக் கொண்டால், சமய, சமுதாயத் துறைகளிலே பல சீர்திருத்தங்களை எடுத்துரைத்த அதேவேளையில், சித்தாந்தம், வேதாந்தம், வள்ளுவம், காந்தீயம், மார்க்சீயம் முதலியவற்றை ஒன்றிணைத்துச் சமரசம் காணவும் அவர் விழைந்தமையைக் காண்கிறோம். சி.என். அண்ணாதுரை அவர்களை எடுத்துக் கொண்டால், பகுத்தறிவு, நாத்திகம், வைதிக மறுப்பு, வர்ணாச்சிரம எதிர்ப்பு முதலியவற்றை வலியுறுத்தி இயக்கம் நடத்திய சீர்திருத்தவாதியாய்த் தோற்றமளித்த அவர், பழந்தமிழ் கொள்கைகளையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலைநாட்ட விரும்பிய மீட்டுயிர்ப்புவாதியாயும் இயங்கினார் என்பது மறுக்கவியலாததொன்றாகும். உண்மையில், இருபதாம் நூற்றாண்டிலே மார்க்சீயம் தமிழில் பயிலத் துவங்கிய பின்னரே, மேற்கூறிய மூன்று போக்குகளிலினின்றும் விடுபட்டு, வரலாற்றுணர்வுடனும் இயக்கவியல் அடிப்படையிலும் பிரச்சினைகளை நோக்கி நடைமுறைக்குத் தேவையான மார்க்கங்களைக் கூறும் போக்கு ஓரளவு வளர்ந்து வந்திருக்கிறது.

இலக்கியத்துறையை – குறிப்பாக சிருஸ்டி இலக்கியத்தை – ஆராயும் பொழுதும் இவ்வுண்மையைக் கண்டு கொள்ள அதிக நேரம் செல்லாது. உதாரணமாக, ஈழத்து நவீன தமிழிலக்கிய முன்னோடியாம் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையை எடுத்து நோக்கினால், ஒன்றிணைக்கும் நோக்கும் போக்கும் அவரிடத்துக் காணப்படும். 'யாழ்ப்பாண சுவதேசக்கும்மி' என்ற நூதனமான படைப்பில் மரபுவழி வரும் மதிப்பீடுகளுக்கும் புதிய ஆசாரங்களுக்கும் இடையே தோன்றும் முரண்பாட்டைக் காண்பதோடு, அதற்கு ஆசிரியர் பரிகாரம் காண முற்பட்டமையையும் காணலாம்.

**சிற்சில ஐரோப்பிய பழக்க வழக்கஞ்**
**சிறந்ததென் பதற்காட் சேபமில்லை**
**முற்சிந்தனையின்றி நந்தேசா சாரங்கள்**
**முற்றும் விடலாமோ?**
**எம்முள்**
**நல்லாயிருக்கும் பழக்க வழக்கத்தை**
**நாம் விடலாகாது**

என்று பாவலர் பாடுகையில் அவரது இலக்கிய நோக்கின் அடிப்படை வெளிப்படையாகின்றது.

உண்மையில் மகாகவி பாரதியின் கவிப் படைப்புகளிலேயே இப்போக்குகள் மூன்றையும் வெவ்வேறு அளவிற் காணக்கூடியதாகவுள்ளது. ஒன்றையொன்று ஈர்த்தும்,

எதிர்த்தும், தழுவியும், மறுத்தும் நிற்கும் வலித்திழுப்பு நிலையிலே Tension முரண்பாடுகள் சங்கமமாகும் அபூர்வ ஆற்றல் பிறக்கிறது. இலக்கியத்துக்கு இந்நிலை பெருவாய்ப்பானது. குருட்டுத்தனமான ஆங்கிலக் கல்வியைப் ''பேடிக் கல்வி'' என்றும், ''ஊணர் கல்வி'' என்றும் கண்டிக்கும் கவிஞர், வேறொரு நிலையில் ''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'' என்றும், ''புத்தம் புதிய கலைகள், பஞ்ச பூதத்தின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே'' என்றும் கூறினார்.

நவீன உலகிலே, குறிப்பாக விஞ்ஞானமும் கைத்தொழிலும் உலகை எத்தனையோ வழிகளில் பிணைத்து இணைக்கும் யுகத்திலே, கிழக்கு – மேற்கு, பழமை – புதுமை, ஆன்மீகம் – அறிவியல் முதலாய பல்வேறு தளங்களிலிருந்து முரண்படும் போக்குகள் எழுவது இயல்பே. அது புறநிலை நிகழ்வு. அவற்றை இனங்கண்டு, அவைக்கேற்ற அகநிலை உணர்வினை உருவாக்கிக் கொள்வதே நவீன இலக்கியத்தின் இன்றியமையாத் தேவையாயுள்ளது. இத்தேவையைப் பொருளுணர்வுடனும், கலை நுணுக்கத்துடனும் நிவேற்றும் இலக்கிய கர்த்தாக்களே ஆற்றல் நிறைந்தோராகக் கணிக்கப்படுகின்றனர்.

(புகழ்மிக்க மார்க்சிய கலை இலக்கிய விமர்சகரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவருமான பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் மறைந்ததின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை (05-04-1933 - 06-12-1982) ஒட்டியும், இவ்வாண்டு அவர் ஜனனத்தின் 75ஆவது ஆண்டு என்பதை நினைவு கூர்ந்தும், 'நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்' என்ற தலைப்பில், அவர் இலங்கை வானொலியில் ஆற்றிய உரை ஒன்றின் அடிப்படையில் தாம் இறப்பதற்கு 10 ஆண்டுகள் முன்னதாக (1972) எழுதிய கட்டுரையின் முக்கியமான ஒரு பகுதியை மேலே பிரசுரித்துள்ளோம்.

தமிழ் கூறு நல்லுலகில் அவதரித்து, குறுகிய தன் வாழ்நாளில் அளப்பரிய சாதனைகள் பல செய்துவிட்டு, மிக இள வயதிலேயே மரணத்தைத் தழுவிய மகாகவி சுப்பிரமணிய பாரதி போல, கைலாசபதி அவர்களும் தான் வாழ்ந்த ஐம்பதுக்கும் குறைவான வயதிலேயே தமிழ் இலக்கியத்துறையிலே பெரும் சாதனைகளை, மாற்றங்களை ஏற்படுத்திய ஒருவராவார். குறிப்பாக தமிழிலக்கிய வரலாற்றையும், தமிழர் பண்பாட்டுக் கூறுகளையும், மார்க்சிய அடிப்படையில் வரலாற்று மற்றும் பொருள்முதல்வாதக் கண்ணோட்டங்களிலும், ஒப்பியல் நோக்கிலும் ஆய்வு செய்து, தமிழிலக்கியத்தின் செல்நெறியின் போக்கைப் புதிய பாதையில், புதிய பரிணாமத்தில் பயணிக்க வைத்தவர்.

அவருடைய ஆய்வுகள், அவரது இலக்கிய எதிர்களால்கூட, மறுத்துரைக்க முடியாத உண்மைகளையும், தர்க்கவியலையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், உழைக்கும் மக்களின் வாழ்வைச் சித்தரிக்கும் கலைஞர்களுக்கு உந்து சக்தியாகவும் இருப்பவை. அவரது மேதாவிலாசத்தின் ஒளி வீச்சு, நூற்றாண்டுகள் கடந்தும் மக்கள் கலை இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஒளியும் வழியும் காட்டுபவை - ஆசிரியர் குழு - வானவில்)

# சிறு நீரகப் பிரச்சினை (செயல் இழப்பு) வராமல் தடுக்க வழிமுறை உள்ளதா? சிறுநீரக சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.சம்பத்குமார் அளித்துள்ள பதில்!

''இரண்டு விடயங்களைக் கவனத்தில் கொண்டால் சிறு நீரகப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கலாம்.

ஒன்று: நமது உடலுக்கு ஒரு நாளைக்கு 6 கிராம் உப்பு போதும். நாமோ 10 முதல் 12 கிராம் உப்பு சாப்பிடுகிறோம். குறைந்தபட்சம் 6 கிராம் உப்பிலேயே ரத்தக் கொதிப்பு வரும் வாய்ப்புண்டு. ரத்தக் கொதிப்பு கிட்னியைப் பாதிக்கும். கூடவே சர்க்கரை நோயாலும் கிட்னி பாதிக்கும். ஆக, உப்பை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளுதல் சிறுநீரகத்துக்கு நன்மை தரும்.

இரண்டு: சிகரட் பழக்கம். இது நுரையீரலை மட்டுமல்ல, கிட்னியையும் பாதிக்கும் என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குடியைவிட அதிகமாக சிகரெட்டால்தான் கிட்னிக்கு ஆபத்து என்பது சமீபத்திய அதிர்ச்சியான உண்மை.

மூன்று: மருத்துவரின் அனுமதியின்றி எடுக்கும் வலி நிவாரண மருந்தும் சிறு நீரகம் செயலிழக்க ஒரு காரணியாக அமைகிறது. எனவே இந்த மூன்றையும் கவனத்தில் எடுத்துக்கொண்டால் கிட்னி பாதிக்காது''

**பிரச்சினைக்குரிய உப்புக்கு மாற்றாக ஏதேனும் உண்டா?**

சீனாவில் சோடியம் குளோரைடு என்று நாம் பயன்படுத்தும் சாதாரண உப்புக்கு மாற்றாக 50 வீதம் சோடியம் குளோரைடு, 50 வீதம் பொட்டாசியமும் மக்னீசியமும் கலந்த புதிய உப்பை அறிமுகப்படுத்தி, சீன அரசே அதை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதனால் அங்கு ரத்தக் கொதிப்பு நோயும் சிறுநீரகக் கோளாறும் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. நமது அரசும் இந்த முயற்சியைக் கவனத்தில் கொண்டால் நல்லது!

**சிறுநீரகப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க பிரத்யேக வழிகள் உண்டா?**

1. அரிசியைக் குறைத்து நார்ச்சத்துப் பொருட்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
2. தினமும் இரண்டரை லீட்டர் தண்ணீர் குடியுங்கள். (அதற்கு மேல் வேண்டாம்)
3. பாராசிட்டமால் மாத்திரை தவிர வலி மாத்திரையை வாங்காதீர்கள்.
4. உப்பைக் குறைத்துக் கொள்க. சிகரெட் பிளீஸ் வேண்டாமே!
5. மாதந்தோறும் சுகர் டெஸ்ட், மடியில் தொப்பை இல்லாத் தன்மை.. போதும், யூ ஆர் ஃபிட்.

(டாக்டர் கே.சம்பத்குமார் சிறுநீரக நோய்கள் சம்பந்தமாக நீண்டகாலமாகப் பல ஆய்வுகளைச் செய்து வருபவர். அவரது ஆய்வு முடிவுகளைப் பல உலக நாடுகள் ஏற்றுள்ளன. தற்பொழுது அவர் மதுரை மிசின் மருத்துவமனையில் சிறுநீரகப்பிரிவு தலைமை மருத்துவராகப் பணி புரிகிறார்.

அவர் 'கல்கி' வார இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றின் முக்கிய பகுதிகளை எமது வாசகர்களுக்காக மேலே தந்துள்ளோம். அவருக்கும் 'கல்கி' இதழுக்கும் எமது நன்றிகள்)

# யாழ்ப்பாணம் ‘உதயன்’ பத்திரிகையின் தொடரும் விசமத்தனங்கள்!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ‘உதயன்’ நாளிதழ் தனது செய்திகளினூடாக செய்து வரும் விசமத்தனங்கள் கணக்கிலடங்காதவை. பலர் உதயன் பத்திரிகையை வாசித்துவிட்டு சினம் கொள்வதும், அதில் கூறப்படும் செய்திகளுக்கு எதிர்மாறான முடிவுகளுக்கு வருவதும் தமிழ் மக்களின் பழக்கமாகிப் போய்விட்டது.

இன்னொரு பக்கத்தில் உதயன் தனது பத்திரிகையில் வெளியிடும் செய்திகள் குறித்து அவதூறு, செய்திகளைத் திரித்தல் போன்ற சட்டங்களின் கீழ் இலங்கை அரசாங்கம் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது எனக் கேள்வி எழுப்புவோரும் இருக்கின்றனர். அதேவேளை உதயன் இவ்வாறெல்லாம் பத்திரிகைச் சுதந்திரத்தைத் துஸ்பிரயோகம் செய்தும், எவ்விதமான சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாமாமல் இருப்பது, இலங்கையில் அதீதமான பத்திரிகைச் சுதந்திரம் இருப்பதன் அடையாளம் என வாதிடுபவர்களும் இருக்கிறார்கள்.

உதயன் பத்திரிகை செய்திகளை எவ்வாறு திரிக்கிறது, அந்தரங்க நோக்கத்துடன் செய்திகளை எவ்வாறு வெளியிடுகின்றது, சமூகத்தில் மதிப்பு மிகுந்த, அதேவேளையில் தனக்குப் பிடிக்காதவர்களை எவ்வாறு அவதூறு செய்கிறது என்பதற்கு சில உதாரணங்களைக் கீழே தருகின்றேன்.

1. சமீபத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஸ்ட அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவின் சதோதரர் ஒருவர் சட்டத்தை மீறிச் செயல்பட்டதனால், அவரைக் கைதுசெய்து பிணையில் வெளிவர முடியாதவாறு காவலில் வைக்கும்படி அமைச்சரே பொலிசாரிடம் கோரியதால், அவரது தம்பியாரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

இந்த விடயத்தை – அதாவது அமைச்சரே தவறு செய்த தனது சகோதரரைக் கைது செய்யும்படி கோரிய முன்னுதாரணமான விடயத்தை – பெரும்பாலான ஊடகங்கள் மறைத்து, “அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பொலிசாரால் கைது!” என, அமைச்சருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டன.

இதை அவதானித்த அமைச்சர், தான்தான் தனது சகோதரரைக் கைது செய்யும்படி பொலிசாரை வேண்டியதாக விளக்கம் அளித்து அறிக்கை விட வேண்டி ஏற்பட்டது.



அப்பொழுது அவர், ‘தான் செய்த புண்ணியம் காரணமாக இரண்டு ஜனாதிபதிகளின் காலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பணியாற்றும் அதிஸ்டம் கிடைத்தது. ஆனால் அதேநேரத்தில் தான் செய்த பாவத்தின் காரணமாக தனக்கு இப்படி ஒரு சதோதரர் வந்து வாய்த்தது’ என மனம் வருந்திக் கூறியிருந்தார். சாதாரணமாக சமூகத்தில் பலர் இப்படி மனம் வருந்துவது வழமை. இதன் அர்த்தம் அதைக் கூறுபவர் ஏதோ பெரிய பாவம் செய்துவிட்டார் என்பதன் பொருள் அல்ல.

ஆனால் இந்தச் செய்தியை யாழ்ப்பாண உதயன் எவ்வாறு தலைப்பிட்டு வெளியிட்டது தெரியுமா?

“அமைச்சர் மைத்திரிபால தான் செய்த பாவங்களை ஏற்றுக் கொண்டார்!”

மைத்திரிபால சொன்னது என்ன? உதயன் சொல்வது என்ன?

வாழ்க! உதயனின் பத்திரிகா தர்மம்!!

உ. 1998 இல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற 'லயன் எயர்' பயணிகள் விமானத்தை 48 பயணிகளுடனும், 6 விமானப் பணியாளர்களுடனும், 3 விமானிகளுடனும் சேர்த்து புலிகள் பூநகரிக்கு அருகில் வைத்துச் சுட்டு வீழ்த்தியிருந்தனர். இந்த காட்டுமிராண்டித்தனமான செயல் அன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதேவேளையில் புலிகள் மீது ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

அண்மையில் அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் இருக்கும் புலி உறுப்பினன் ஒருவன் கொடுத்த தகவலின் அடிப்படையில், கடற்படையினர் சுடப்பட்ட விமானத்தின் சில பகுதிகளை பூநகரிக் கடலில் மீட்டுள்ளனர். இந்த விடயம் மீண்டுமொருமுறை ஊடகங்களில் செய்தியாக இடம் பிடித்து, புலிகளின் மீது மக்களின் வெறுப்பைத் தூண்டி விட்டுள்ளது.

மக்களின் மனநிலையைக் கண்டு பொறுக்காத 'உதயன்' பத்திரிகை, இது பற்றி வெளியிட்ட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டு விசமத்தனம் செய்துள்ளது. 2012 அக்டோபர் 29ஆம் திகதி "லயன் எயார் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை" எனத் தலைப்பிட்ட செய்தியில் உதயன் பின்வருமாறு கூறுகின்றது:

"எனினும் அன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவத்திற்குச் சொந்தமான விமானமாக இந்த லயன் எயர் செயற்பட்டது. ஆனாலும் பொதுமக்கள் அந்த விமானங்களிலேயே கொழும்பிற்கு சென்று வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு போக்குவரத்தும் நடைபெற்றது.

ஆனால் இவ்வாறான விமானங்களில் பயணத்தினை மேற்கொள்ள வேண்டாம் என பொதுமக்களிடம் விடுதலைப் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தனர் என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும்"

உதயனின் இந்தச் செய்தியில் பாரதூரமான பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

ஒன்று – இந்த விமானம் இராணுவத்துக்குச் சொந்தமானது என்ற உதயனின் கூற்று பச்சைப் பொய்யாகும். அது தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதாகும்.

இரண்டாவது – புலிகள் பல தடவை அறிவுறுத்தியும் பொதுமக்கள் அதில் பயணம் செய்ததால், புலிகள் சுட்டு வீழ்த்தியது சரிதான் என்ற கருத்துப்பட உதயன் எழுதியுள்ளது! இது எவ்வளவு மோசமான, மானிட விரோதமான, அந்த விமானத்தில் பயணம் செய்து மரணித்தவர்களின் ஆத்மாக்களை அவதூறு செய்யும் கருத்து!! உதயனின் இந்தச் செய்தி குறித்தும் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்வது அவசியமானது.

3. மூத்த அரசியல் தலைவர் அலவி மௌலானா அவர்களை இலங்கையில் அறியாதவர்கள் கிடையாது எனலாம். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அவர் நாடறிந்த தொழிற்சங்கவாதியுமாவார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடி பல தடவைகள் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளானவர். சிறையில் அடைக்கப்பட்டவர். அவரின் தன்னலம் கருதாத சேவையைக் கருத்தில் கொண்டு சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் அவரை மேல் மாகாண ஆளுநராக நியமனம் செய்தது. தற்பொழுது மகிந்தவின் அரசாங்கமும் அவரை மூன்றாவது தடவையாகவும் மேல் மாகாணத்தின் ஆளுநராக நியமித்துள்ளது.

அவரது இந்த நியமனத்தை காமாளைக் கண்களால் பார்த்த உதயன் அச்செய்தியை எப்படி வெளியிட்டது தெரியுமா?

"தனது தள்ளாத வயதிலும் அலவி மௌலானா மூன்றாவது தடவையாகவும் மேல் மாகாண ஆளுநரானார்!"

பாருங்கள்! எம்மையும் விட சிறுபான்மையான ஒரு சமூகத்தைச் சேர்ந்த மூத்த அரசியல் தலைவரை, நேர்மை தவறாத நிர்வாகியை, அனைத்து இன மக்களினதும் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரை, உதயன் எப்படி அவதூறு செய்கிறது பாருங்கள்!!

உதயன் பத்திரிகையின் உரிமையாளர் யாழ்ப்பாணம் மக்களின் பல கோடி ரூபா பணத்தைச் சுருட்டிய 'சாப்றா பினான்ஸ்' நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிர்வாகியும், தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் ஆவார். அலவி மௌலானவைக் கேலி செய்யும் உதயன் பத்திரிகையை நடாத்தி வரும் அவரிடம் ஒரு கேள்வி.

அலவி மௌலானா தள்ளாத வயதில் இருக்கிறார் என்றால், உங்கள் தலைவர் சம்பந்தன் மட்டும் 'தள்ளக்கூடிய' இளைஞனாகவா இருக்கிறார்?

**- தியாகு**

# தாக்கரேவுக்கு ஏன் அஞ்சலி செலுத்தமுடியாது?



மார்கண்டேய கட்ஜு

அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள், கிரிக்கெட் வீரர்கள் என்று பலரும் முண்டியடித்து மறைந்த பால் தாக்கரேவுக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். பிரபலங்களிடம் இருந்து புகழஞ்சலிகளும் நினைவஞ்சலிகளும் குவிந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் எனது மாறுபட்ட கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இறந்தவர்களைப் பற்றி நல்லவிதமாக மட்டுமே பேசவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் இத்தகைய விதிகளைக் காட்டிலும் என் நாட்டின் நலன் எனக்கு முக்கியம்.

பால் தாக்கரேவின் பண்பு என்று எதைச் சொல்லலாம்? எனக்குத் தெரிந்து மண்ணின் மைந்தன் (பூமிபுத்ரா) என்னும் அவருடைய தேச விரோதக் கோட்பாடுதான்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பகுதி 1(1) இவ்வாறு கூறுகிறது. 'இந்தியா, அதாவது பாரத் மாநிலங்களின் யூனியனாக இருக்கும்.' அதாவது, இந்தியா என்பது கூட்டுக்குழு அல்ல, யூனியன்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பகுதி 19(1)(e) இவ்வாறு கூறுகிறது. 'இந்தியாவில் எந்தப் பகுதியிலும் தங்கவும், குடியமரவும் அனைத்து குடிமக்களுக்கும் உரிமை இருக்கிறது.'

ஒரு குஜராத்தியோ, தென் இந்தியனோ, பீகாரியோ, உத்தரப் பிரதேசத்துக்காரரோ அல்லது இந்தியாவில் எந்தப் பகுதியில் இருப்பவராக இருந்தாலும் சரி, மகாராஷ்டிராவுக்குக் குடிபெயரலாம். இது அனைவருக்குமான அடிப்படை உரிமை. (சில வரலாற்றுக் காரணங்களுக்காக ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அவ்வாறு குடியேறுவதில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன.)

ஆனால், பூமிபுத்ரா கோட்பாட்டின்படி, மகாராஷ்டிரா மராத்தியர்களுக்கு மட்டுமே உரியது. குஜராத்திகள், தென் இந்தியர்கள், வட இந்தியர்கள் ஆகியோர் 'வெளியில் இருப்பவர்கள்'. நாம் மேலே கண்ட அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு நேர் எதிரான கோட்பாடு அல்லவா இது! இந்தியா என்பது ஒரு தேசம். மராத்தியர் அல்லாதாரை அயல்நாட்டினரைப் போல் மகாராஷ்டிராவில் நடத்தமுடியாது.

தாக்கரே தோற்றுவித்த சிவ சேனா, அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் தென் இந்தியர்களைத் தாக்கி, அவர்களுடைய வீடுகளையும் உணவிடங்களையும் அழித்தொழித்தது. மும்பையில் செய்தித்தாள்கள் விற்பவர்களாகவும் டாக்ஸி ஓட்டுநர்களாகவும் இருந்த பீகாரிகளையும் உத்தரப் பிரசேத்துக்காரர்களையும் 2008ல் தாக்கினார்கள். அவர்களுடைய வாகனங்கள் நொறுக்கப்பட்டன. ஊடுருவல்காரர்கள் என்று அழைக்கப்பட்டு அவர்கள் தாக்கப்பட்டார்கள். இஸ்லாமியர்கள் வில்லன்களாகச் சித்திரிக்கப்பட்டார்கள்.

இவையனைத்தும் ஓட்டு வங்கிகள் உருவாக தாக்கரேவுக்கு உதவி செய்தன. வெறுப்புணர்வின் அடிப்படையில் திரண்ட வங்கிகள் இவை. ஹிட்லரும் இப்படித்தான் செய்தார் என்பதையும் தாக்கரே ஹிட்லரை நேசித்தவர் என்பதையும் இங்கே நினைவுபடுததிக்கொள்ளவேண்டும்.

தாக்கரோவை நான் விமரிசிப்பதற்குக் அவருடைய தேச விரோத மற்றும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான கோட்பாடு மட்டும் காரணமல்ல. இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது.

What is India? என்னும் என்னுடைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, இந்தியா என்பது வட அமெரிக்காவைப் போல குடியேறிகளால் உருவான ஒரு நாடு. இன்று இங்கு வசிக்கும் 92 முதல் 93 சதவிகித மக்கள் இந்தியாவின் பூர்வக்குடிகள் அல்லர். அவர்கள் குடியேறிகளின் வழிவந்தவர்கள். நல்ல வாழ்வு தேடி வட மேற்குப் பகுதியில் இருந்து இந்தியத் துணைக் கண்டத்துக்கு வந்தவர்கள் அவர்கள். இதுபற்றி மேலும் விரிவாக அறிய என் வலைப்பதிவுக்குச் செல்லுங்கள். இந்தியாவின் அசலான பூர்வகுடிகள் (பூமிபுத்ராக்கள்) ஆதிவாசிகள் என்று அழைக்கப்பட்ட திராவிட பழங்குடிகளுக்கு முந்தையவர்கள். (கோண்டுகள், சாந்தல்கள், தோடாக்கள் போன்றவர்கள்.) இப்போது அவர்களுடைய மக்கள்தொகை 7 அல்லது 8 சதவிகிதம் மட்டுமே.

பூமிபுத்ரா கோட்பாட்டை நிர்தாட்சண்யமாக அமல்படுத்தவேண்டுமானால், 92 முதல் 93 சதவிகிதி மகாராஷ்டிரியர்களை நாம் அந்நியர்களாக மதிப்பிடவேண்டியிருக்கும். இவர்களுள் தாக்கரே குடும்பத்தினரும் அடக்கம். மகாராஷ்டிராவைப் பொருத்தவரை உண்மையான பூமிபுத்ராக்கள் எனப்படுவோர் பழங்குடிகள் (Bhils போன்றவர்கள்). இவர்கள் தற்போது 7 முதல் சதவிகிதம் வரையிலேயே இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பல பிரிவினைவாத சக்திகள் இன்று இந்தியாவில் இருக்கிறார்கள். இந்தியாவைத் துண்டுகளாக உடைப்பதே இவர்கள் குறிக்கோள். நாட்டுப்பற்று உள்ள அனைவரும் இவர்களுக்கு எதிராகப் போராடவேண்டும்.

நாம் எதற்காக ஒன்றாக இருக்கவேண்டும்? ஏனென்றால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால் மிகப் பெரிய அளவில் செல்வம் சேர்த்தாகவேண்டும். விவசாயத்தால் மட்டும் இதனை நம்மால் சாதிக்கமுடியாது. நமக்கு நவீனத் தொழிற்சாலைகள் தேவை. நவீனத் தொழிற்சாலைகளுக்கு மிகப் பெரிய சந்தை தேவைப்படுகிறது. ஒன்றுபட்ட இந்தியாவால்தான் இப்படிப்பட்ட மிகப் பெரிய சந்தையை அளிக்கமுடியும். வறுமையை ஒழிக்கவேண்டுமானால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டுமானால், பிற சமூக அவலங்களை ஒழிக்கவேண்டுமானால் நவீன தொழிற்சாலைகள் தேவை. நவீன கல்விமுறையையும், நல்ல மருத்துவ வசதிகளையும் நாம் உருவாக்கவேண்டும். அதற்கு நாம் ஒன்றாக இருக்கவேண்டியது அவசியம். உலகின் முன்னேறிய நவீன நாடுகளில் ஒன்றாக இந்தியா வளரவேண்டும்.

எனவே, திரு பால் தாக்கரேவுக்கு அஞ்சலி செலுத்தமுடியாததற்கு நான் வருந்துகிறேன்.

(நவம்பர் 19, 2012 இல் THE HINDU பத்திரிகையில் வெளியான ஜஸ்டிஸ் மார்கண்டேய கட்ஜ-வின் கட்டுரை Why I can't pay tribute to Thackarey, அவர் அனுமதியுடன் இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கட்டுரையாளர், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாகவும் இருந்தவர். தற்சமயம், இந்திய பிரஸ் கவுன்சில் தலைவராக இருக்கிறார்)

**தமிழில்: மருதன்**

---

முன்பக்கத்தொடர்ச்சி.....

நாயகம் பான் கீ மூன், தருஸ்மன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழு இலங்கைக்குச் செல்லாமலும், பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்காமலும், ஓர் அறிக்கையைத் தயாரித்து செயலாளர் நாயகத்திடம் கையளித்தது. அதில் அரச படைகள் மீதும், புலிகள் மீதும் பல போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஆனால் அதன் பின்னரும், புலிகளைத் தவிர்த்துவிட்டு அரச படைகள் மீது மட்டும் புலி சார்புச் சக்திகளும், சில மேற்கத்தைய சக்திகளும் குற்றச்சாட்டுகளை அடுக்கி வந்தன. அதன் அடிப்படையில், ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் மேற்கத்திய சக்திகளின் உதவியுடன் அமெரிக்கா இலங்கை அரசு மீது போர்க் குற்றப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த இறுதிக்கட்டப் போரில் மட்டுமின்றி, இலங்கையில் இனவாத யுத்தம் ஆரம்பித்த நாளிலிருந்து அதில் சம்பந்தப்பட்டு வந்த (ஒரு வகையில் அதற்குக் காரணமாகவும் இருந்த) இந்தியாவும் அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்து தான் ஒரு அப்பாவி போல நடித்ததுதான்.

ஆனால் இவையெல்லாம் நடந்து முடிந்து, இலங்கை அரசை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, எல்லோரும் சுற்றி வளைத்துத் தாக்கி வந்த நிலையில், இப்பொழுது ஐ.நாவின் உள்ளக அறிக்கை என்ற ஒன்று 'கிணறு வெட்ட பூதம்' கிளம்பியது போல வெளிப்பட்டு, ஐ.நா அதிகாரிகளையே திருப்பித் தாக்கியுள்ளது. அந்த அறிக்கையின்படி, ஐ.நா இறுதிப் போரின் போது அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது என்ற மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

இப்படியான குற்றச்சாட்டு வந்த பின்னர், ஐ.நா இந்தப் பாரதூரமான தவறை இழைத்ததிற்குக் காரணமான அதிகாரிகளை முறைப்படி விசாரணைக்கு உட்படுத்தி, அவர்களுக்குத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இனிமேல் இப்படி நடந்து கொள்ளாமல் தவிர்பதற்கு, இதை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அறிக்கையுடன், ஐ.நா தலைமை அதைக் கைகழுவிவிட்டது. ஐ.நா தலைமையின் இந்த மெத்தனப் போக்கை, இலங்கை அரசு மீது தொடர்ச்சியாகப் போர்க் குற்றச் சாட்டுகளைச் சுமத்தி வரும் எந்த சர்வதேச சக்திகளும் பாரதூரமாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஐ.நா செய்தது சரி என்றால், இலங்கையும் இனிமேல் இவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறி, போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து அதை விடுவித்து விடலாம் தானே?

எது எப்படியோ, இந்தப் போரின் போது ஏற்பட்ட உரிமை மீறல்கள் மீதான குற்றச்சாட்டுகள் இலங்கை அரசு மீது மட்டும் சுமத்தப்பட்ட நிலை மாறி, இப்பொழுது ஐ.நாவும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. அது ஒரு வகையில் நல்லதே. ஆனால் இன்னமும் சேர்க்கப்பட வேண்டிய குற்றவாளிகள் பலர் இருக்கின்றனர்.

முக்கியமாக போரின் ஒரு தரப்பாகவும், இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்குப் பிரதான காரணகர்த்தாக்களாகவும் இருந்த புலிகள், இந்தப் போர்க் குற்றச் சாட்டுகளில் இருந்து தப்பிவிட முடியாது. அவர்களது தலைமை அழிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக அவர்கள் எக்காரணம் கொண்டும் தப்ப முடியாது. அவர்களது இரண்டாம் மட்டத் தலைவர்கள் சிலரும்,

முக்கியமான செயற்பாட்டாளர்களும் அரசாங்கத்தின் வசம் இருக்கிறார்கள். பொதுமக்களின் அழிவுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் காரணகர்த்தா என, இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்கெய்ம் கூட அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் புலிகளின் நீட்சியாகப் பல புலம்பெயர் புலி அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. போரில் இந்த சக்திகளின் பங்கு குறித்து தருஸ்மன் அறிக்கையும்கூட சுட்டிக் காட்டியுள்ளது.

இனப் பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்காமல், அதை யுத்தமாக மாற்றி, 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மக்கள் மேல் கொடூர யுத்தத்தை நடாத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளில் பங்கு வகித்தவர்கள், இன்றும் அக்கட்சியின் தலைமையை அலங்கரித்து வருகின்றனர். முதலில் அவர்களிடமிருந்தே இந்தப் போர்க்குற்றச்சாட்டுகளை ஆரம்பிக்க வேண்டும்.

இவர்களைவிட, போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தக்கூடிய புலிகளின் பிரதிநிதிகள் இலங்கைக்குள்ளேயே இருக்கிறார்கள். அவர்கள் வேறு யாருமல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே அவர்கள். கூட்டமைப்பு தமது தேவை கருதி புலிகளாலேயே உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பாகும். அவர்கள் புலிகள் அழியும்வரை, புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி வந்தவர்கள். அதுமாத்திரமின்றி, இறுதிக்கட்டப் போரின் போது புலிகள் ஒரு சிறிய பகுதிக்குள் இலட்சக்கணக்கான மக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்த போது, ஒரு தடவை தன்னும் அந்த அப்பாவி மக்களை விடுவிக்கும்படி இந்தக் கூட்டமைப்பினர் புலிகளிடம் கோரவில்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களே.

அத்துடன் இந்தப் போரைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் எனத் தென்னிலங்கையில் இயக்கம் நடாத்திய அனைத்து சிங்களப் பேரினவாத சக்திகளும்கூட போர்க் குற்றவாளிகளே. குறிப்பாக சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் போரை நிறுத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகச் சமாதான வழிகளில் தீர்வுகாண வேண்டும் என்பதற்காக, அவரது அரசாங்கம் 'வெண் தாமரை இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கி சிங்கள மக்கள் மத்தியில் பெரியளவிலான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. ஆனால் இதற்கெதிராகப் போரைத் தொடர வேண்டும் எனப் போட்டி இயக்கமொன்றை ஜே.வி.பி ஆரம்பித்ததுடன், சிங்களக் கிராமப்புறங்களில் இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டது. எனவே இந்தப் போர்க் குற்றங்களில் ஜே.வி.பிக்கும் பாரிய பங்குண்டு.

2000ஆம் ஆண்டில் சந்திரிகா கொண்டு வந்த நல்லதொரு அரசியல் தீர்வைக் குழப்பியதில், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஹெல உருமய, விக்கிரமபாகு கருணரத்ன என அனைவருக்கும் பங்குண்டு. சமாதானத் தீர்வைக் கொண்டுவர விடாமல் யுத்தத்தைத் தொடர வைத்த இக்கட்சிகள் போர்க் குற்றவாளிகள் இல்லையா?

இதேபோல, தமது பிழைப்புவாத அரசியலுக்காக அன்றிலிருந்து இன்றுவரை, இலங்கைத் தமிழரைப் போருக்குத் தூண்டி வந்த தமிழகத்தின் மு.கருணாநிதியிலிருந்து தொல்.திருமாவளவன் வரையிலான தமிழக சாக்கடை அரசியல்வாதிகளும் இந்தப் போர்க் குற்றங்களுக்கு உரியவர்களே.

எல்லாவற்றுக்கும் மேலாக 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற சுலோகத்தின் கீழ், இலங்கையில் போரை ஊக்குவித்து வந்த மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும், தனது அரசியல் தேவைகளுக்காக தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் இன்ன பிற உதவிகளும் வழங்கி ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டுவிட்டு, பின்னர் இலங்கை அரசின் பக்கம் நின்று யுத்தத்தை மறைமுகமாக வழிநடாத்திய இந்தியாவும் போர்க் குற்றவாளிகள் பட்டியலிலில் நிச்சயமாகச் சேர்க்கப்பட்டே தீர வேண்டும்.

இவ்வளவு குற்றவாளிகளும் இலங்கையில் நடைபெற்ற போரில் சம்பந்தப்பட்டிருக்க, உலகின் மிகவும் பயங்கரமான அமைப்பான புலிகள் இயக்கத்திடமிருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போரிட்ட இலங்கை அரசின் படைகள் மீது மட்டும் போர்க் குற்றம் சுமத்துவது ஒரு தலைப்பட்சமானதும் அநீதியானதுமாகும். எனவே போர்க் குற்றச்சாட்டு விசாரணை என்பது, 30 வருடப் போரையும் உள்ளடக்கியதாக இருப்பதுடன், அதில் சம்பந்தப்பட்ட சகலரையும் விசாரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

முதலில் இலங்கை அரசு மீது மட்டும் சுமத்திய குற்றச்சாட்டு, இப்பொழுது ஐ.நாவையும் உள்ளடக்கியுள்ளது வரவேற்கத்தக்கதே. இது மேலும் விரிவு பெற்று நாம் மேலே குறிப்பிட்ட அனைவரையும் உள்ளடக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். *

# சிரியா : இறந்தகாலமும் எதிர்காலமும்

சிரியாவில் என்னதான் நடந்துகொண்டிருக்கிறது? அங்கு நடைபெறுவது மோதல்களா, உள்நாட்டுப் போரா அல்லது முழு நீள யுத்தமா?

முதலில் சிரியாவின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்துவிடுவோம். சிரியாவின் வரலாறு பல நாகரிகங்களை உள்ளடக்கியது. கி.மு. 3000ல் சிரியா, எப்ளா எனும் நாகரிகத்தின் முக்கியப் பிறப்பிடமாக இருந்தது. எகிப்தியர்கள், சுமேரியர்கள், அசிரியர்கள், பாபிலோனியர்கள் எனப் பலரும் எகிப்தைக் கைப்பற்றி ஆட்சி செய்திருக்கிறார்கள். பின்னர் பாரசீகர்களாலும் ஆளப்பட்டது. கி.பி. 640ல் இஸ்லாமியர்களால் கைப்பற்றப்பட்டு உமையத் வம்சா வழியினராலும் பின்னர் அபாசித் வம்சா வழியினராலும் (கி.பி. 750) இறுதியாக பிரெஞ்சுக்காரர்களாலும் ஆளப்பட்டு 1946ல் சுதந்திரம் பெற்று, எகிப்தின் ஒரு பகுதியாக இருந்தது. 28 செப்டெம்பர் 1961 அன்று ஐக்கிய அரபு குடியரசால் சிரியா சுதந்திர நாடாக உருவானது.

1970ல் இருந்து இன்றுவரை பாத் என்னும் கட்சியால் சிரியா ஆளப்பட்டு வருகிறது. 1967ல் எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான போரில் எகிப்துடன் இணைந்து சிரியாவும் இஸ்ரேலைத் தாக்கியது. இப்போரின் தோல்வியால் சிரியா நாட்டிடமிருந்து கோலன் ஹைட்ஸ் என்ற இடத்தை இஸ்ரேல் கைப்பற்றியது.

அக்டோபர் 1973ல் மீண்டும் சிரியா இஸ்ரேலிடம் தோற்றது. கோலன் ஹைட்ஸை கைப்பற்ற முடியவில்லை. 1970 தொடங்கி 2000 வரை 30 ஆண்டுகள் ஹஃபிஸ் அல் அசாத் ஆட்சி செய்தார். அவருடைய மரணத்துக்குப் பிறகு அவர் மகன் பசார் அல் அசாத் இன்று வரை ஆண்டு வருகிறார். ஒரு கட்சி, ஒரு ஆட்சிமுறை கொண்ட நாடு அது. பசார் ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டில் ஜனநாயகத்தை ஆதரித்த குழுக்கள் முடக்கி வைக்கப்பட்டன.

2011ல் அரேபிய வசந்தம் துனீசியாவில் தொடங்கியது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எகிப்தில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த முபாரக்கைத் துரத்தியது. லிபியாவில் கடாபியை அகற்றியது. இன்னும் பல நாடுகளில் மாற்றமும் ஜனநாயகமும் தழைக்க வழிவகை செய்தது. இந்த அரேபிய வசந்தத்தின் தாக்கம்தான் சிரியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போர்.

2011 தொடங்கி 17 மாதங்களாக சிரியாவில் போர் நடைபெற்று வருகிறது. இதுவரை மொத்தம் 21,000 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் அகதிகளாக அண்டை நாடுகளுக்குக் குடிபெயர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அதிபர் அசாத் மற்றும் அவருடைய ஆட்சிக் குழுவினர் அலாவைட் (Alawites) என்னும் இஸ்லாமிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 12% தான். சுன்னி (Sunni) இஸ்லாமியர்களின் எண்ணிக்கை 75%. ஒருவகையில் சிரியாவில் இப்போது நடைபெறும் உள்நாட்டுப் போரை இந்த இரு பிரிவினருக்கு இடையில் நடைபெறும் போர் என்றும் சொல்லலாம்.

சிரியாவில் நடைபெறும் மோதல்களை அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் கண்டித்துள்ளன. ஐரோப்பிய யூனியன், ஐ.நா, அரபு லீக் ஆகிய அமைப்புகளும் பல மேற்கத்திய நாடுகளும் சிரியாவில் நடைபெறும் வன்முறை மோதல்களையும் அரசின் செயலின்மையையும் கண்டித்துள்ளன. சென்ற மாதம் 16ம் தேதி, இஸ்லாமிய கூட்டமைப்புக் கழகத்தில் இருந்தும் சிரியா வெளியேற்றப்பட்டுள்ளது. சிவிலியன்கள்மீது சிரியா அரசு மேற்கொண்டுவரும் இராணுவ தாக்குதலை நிறுத்திக்கொள்ளாவிட்டால் தடையுத்தரவுகள் விதிக்கவேண்டி வரும் என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் எச்சரித்தது. பல நாடுகள் சிரியாவுக்கு எதிராக வாக்களித்தபோதும், சீனாவும் ரஷ்யாவும் சிரியாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. தடையுத்தரவும் முறியடிக்கப்பட்டது.

இந்தியா, சிரியாவுக்கு எதிராக வாக்களித்தது. அதே சமயம், சிரியாவை ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் இருந்து நீக்கக் கூடாது என்றும் அரசியலும் கலாசாரமும் வெவ்வேறானவை என்றும் விளக்கியது.

சிரியாவின் அண்டை நாடுகளான லெபனான், துருக்கி, ஜோர்டன், இராக் ஆகிய நாடுகளில் பயமும் பதற்றமும் அதிகரித்துள்ளன. அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தற்கொலைத் தாக்குதல்களே அதற்குக் காரணம். அல் காயிதா இயக்கத்துடன் இந்தத் தற்கொலைப் போராளிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என்னும் சந்தேகமும் உள்ளது. ஐ.நா.சபையின் முன்னாள் பொதுச்செயலாளரும் சிரியாவுக்கான அமைதித் தூதருமான கோபி அன்னான் சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஆறு அம்சத் திட்டம் ஒன்றை முன்மொழிந்தார். ஆனால் அது நிறைவேறாததால் அவர் ராஜினாமா செய்துவிட்டார். அல்ஜீரிய நாட்டின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் லக்டார் பிராமி புதிய தூதராகப் பொறுப்பேற்றுள்ளார்.

சிரியாவின் எதிர்காலம் என்ன? அமைதிப் பேச்சுவார்த்தைகள் கைகொடுக்குமா? லிபியாவைப் போலவே சிரியாவின் இராணுவமும் முறியடிக்கப்படும் என்றும் தலைநகரம் டெமாஸ்கஸில் இந்தப் போர் முடிவடையும் என்றும் அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**– பெர்னார்ட் D சாமி** (நன்றி: ஆழம்) *